(இ) நான்கு அறநிலையங்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஐந்தாவது அறநிலையத்திற்கும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, ஒரு கோவிலின் பொறுப்பை ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்குக் கொடுத்து, இன்னும் 50 மைலுக்கு அப்பாலுள்ள ஒன்றிரண்டு கோவில்களுக்கும் பொறுப்பு கொடுப்பதால், ஊழல்களும், சிக்கல்களும் ஏற்படுகிறதே, அதைத் தடுக்க இந்த முறையை மாற்ற சர்க்கார் விரைவில் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய கருத்து யோசனையில் எடுக்கப்படும். கேட்ட கேள்வி ஐந்து கோவில்கள் பற்றியது. அதில் நான்கு கோவில்களுக்கு நியமனம் ஆகிவிட்டது. ஐந்தாவது கோவிலுக்கு ஏற்பாடு செய்யப்படு கிறது என்று தெரிவித்தேன்.

***350 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மாயூரம் தாலூக்காவிலுள்ள தருமபுரம் மடம், நாகப்பட்டினம் தாலூக்கா சிக்கல், நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம் இவைகளுக்கான சொத்துப் பதிவேடுகள் 1959-ம் வருடத்திய அறநிலையச் சட்டங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நாகப்பட்டினம் தாலூகாவில் சிக்கலிலுள்ள நவநீதேஸ்வரர் தேவஸ்தானம் சம்பந்தமான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டு 1951-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஒப்புதல் பெற்றது. தரும புரத்தில் உள்ள தருமபுரம் மடத்தைப் பொறுத்தவரையில், அதன் சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இன்னும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சொத்துக்களின் விவரங்கள் என்ன? ஏன் ஒப்புதல் பெறவில்லை ? துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தர்மபுரம் ரெஜிஸ்டர் அந்த ஆதீனத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அளிக்கவேண்டும் என்று துணை கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். விரைவில் அதைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

சுவர்ணபுரீஸ்வரர் கோயில், சித்தாய்மூர்

***351 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருத்துறைப்பூண்டி தாலூக்கா, சித்தாய்மூர் சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் நிர்வாக அலுவலர் ஏராளமான நகைகளைக் கையாடல் செய்ததாக 1966-ஆம் ஆண்டில் மேற்படி கிராம மக்களிடமிருந்து வந்த புகாரின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த ஆலய நிர்வாக அதிகாரிக்கெதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. குற்றங்களுக் கான விசாரணை முடிவடையும் வரை அவர் தற்காலிகமாய் வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, சென்ற ஆட்சியில் அவர்களுக்கு நெருங்கியவர் என்ற காரணத்தால், குற்றம் கண்டு பிடிக்கப் பட்டும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது அப்படி மிஸப்ரோப்ரியேஷன் செய்த சொத்துக்களை ரெகவர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர் மேல் கிரிமினல் வழக்குத் தொடர எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?